# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தோரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

| | | |
|---|---|---|
| மாநிலத் தலைவர் | | பொதுச் செயலாளர் |
| **மு.சுப்பிரமணியன்** | | **மு.அன்பரசு** |
| மாநில துணைத் தலைவர்கள் | | மாநிலச் செயலாளர்கள் |
| **ந.குமாரவேல்** | | **இரா.பன்னீர்செல்வம்** |
| **ஆ.செல்வம்** | | **சி.ஆர்.இராஜகுமார்** |
| **எஸ்.தமிழ்ச்செல்வி** | | **என்.ஜனார்த்தனன்** |
| **சு.பார்த்திபன்** | | **தீ.கலைசெல்வி** |
| **மொ.ஞானத்தம்பி** | மாநிலப் பொருளாளர் | **எம்.சௌந்தரராஜன்** |
| **மு.சுப்பிரமணியன்** | **எம்.தாங்கராஜ்** | **ஏ.பெரியசாமி** |


ஊடக செய்தி 11 / 2018 — நாள் : 23.05.2018

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும்**

## ஊடகச் செய்தி

**ஸ்டெர்லைட் ஆலை அமைப்பதற்குக்கு எதிராக போராட்டம் நடத்திய பொதுமக்களை சிட்டுக்குருவிகளைப் போல் சுட்டு வீழ்த்திய காவல் துறைக்கும் அவர்களை ஏவிய அரசாங்கத்திற்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம்**

**கல்லாப்பெட்டி ராஜாங்கத்தை**
**ஜில்லாவை விட்டு அகற்றும் வரை**
**நில்லாமல் நடக்கட்டும் போராட்டங்கள்**

**24.05.2018ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பேருந்து நிலையங்கள் முன்பு ஜாக்டோ-ஜியோ கண்டன ஆர்ப்பாட்டம்!**

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று அந்த மாவட்ட மக்கள் கடந்த நூறு நாட்களாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். நூறு நாட்களாக போராடும் மக்களை தமிழக அரசின் உயரதிகாரிகளோ, அமைச்சர்களோ, துணை முதல்வரோ, முதல்வரோ அழைத்துப் பேசவோ, சாதக பாதகங்களை கேட்டு பிரச்சனையை சுமூகமாக தீர்க்கவோ அல்லது குறைந்தபட்சம், மக்களின் நலனை மீறி ஆலையை அரசுத் திறக்க ஒப்புக்கொள்ளாது என்றதொரு அறிக்கையோ, அறிவிப்பையோ வெளியிடவோ முன் வரவில்லை. மாறாக நீங்கள் என்ன செய்தாலும் எத்தனை நாள் போராட்டம் நடத்தினாலும் நாங்கள் ஆலையை மூடப் போவதில்லை என்ற கங்கணம் கட்டிக்கொண்டு சர்வாதிகார

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

அராஜகத்தில் இறங்கி, நியாயமான முறையில் போராட்டம் நடத்திய மக்களை சிட்டுக்குருவிகளை சுட்டுத்தள்ளுவதுபோல் கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளி அடித்துத் துவைத்து 11 உயிர்கள் வரை உயிர் நீக்கவும், பல அப்பாவி மக்களின் உயிர்கள் ஊசலாடவும் வைத்து படுபாதகச் செயல் புரிந்துள்ளனர்.

இந்தப் போராட்டம்தான் என்றில்லை, எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டதிலிருந்து தமிழ்நாட்டில் யார் போராட்டம் நடத்தினாலும் அதை ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் கண்டுகொள்ளாத நிலையும், போராட்டம் தீவிரமானால் போராடுபவர்களை குண்டுக்கட்டாக தூக்கிப்போய் ஓரிடத்தில் அடைத்து வைத்து மாலையில் விடுவிப்பதான நிகழ்வுகளும்தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்தை பொறுத்தவரை ஆரம்ப கட்டத்தில் அதை ஊடகங்களும், பத்திரிகைகளும் இருட்டடிப்பு செய்தன. பின்னர் போராட்டம் வலுவடைந்த நேரத்தில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சித்தலைவர்கள் முதல், அமைப்புகள் நடத்துகிறவர்கள் வரை போராட்டத்துக்கு நேரில் சென்று ஆதரவு தெரிவித்தனர். ஆனால், மக்கள் என்ன போராட்டம் நடத்தினாலும் அதைப்பற்றி எந்தக் கவலையும் அற்று இருந்தது இவ்வரசு. ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்தின் 100வது நாளில், தங்கள் கோரிக்கைகளை ஆட்சியரை நேரில் சந்தித்து மனுவாகக் கொடுப்பது, வாங்க மறுத்தால் ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடுவது என்று முடிவெடுத்து போராட்டத்தை அறிவித்தனர். முற்றுகைப் போராட்டம் அறிவிக்கப்பட்ட உடனேயே தூத்துக்குடியில் 144 தடை உத்தரவை பிறப்பித்த மாவட்ட ஆட்சியர், போராட்டம் நடந்த நாளில் அலுவலகத்தில் இல்லாமல் இருந்ததும் மக்களை சந்திக்க மறுத்ததும், மக்கள் அதனால் சினங்கொண்டு எழுந்ததும் அதை முடிவுக்குக் கொண்டுவர காவல்துறையினரை ஏவிவிட்டு துப்பாக்கி சூடு நடத்தியதும் மிகவும் கொடூரமான நிகழ்வுகள்.

நடந்துவிட்ட கொடூரத்திற்கு முழுக்க முழுக்க காரணம் அலுவலகத்தில் இல்லாத ஆட்சியரும், அழைத்துப் பேச மனமில்லாத அரசும்தான். ஸ்டெர்லைட் ஆலை விவகாரம் பற்றி இத்தனை நாட்கள் வாய்மூடி மௌனமாக இருந்த முதல்வர் துப்பாக்கி ரவைகளுக்கு 11 பொதுமக்கள் பலியான பின்னர், மக்களை அமைதியாக இருக்கும்படியும், மக்களுக்கு எதிரான திட்டங்கள் எதனையும் ஆளும் அரசு மக்களின் ஒப்புதல் இல்லாமல் செயல்படுத்தாது என்றும் அமைதி அறிக்கை வெளியிடுகிறார். இந்த அறிக்கையை இத்தனைநாள் வெளியிடவிடாமல் தடுத்தது எது? யார்? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இப்போது எழுந்துள்ளது. ஸ்டெர்லைட் ஆலை சம்பந்தமான போராட்டத்தின் 100வது நாள் போராட்டத்தில் காவல் துறையினரும் அதிகாரிகளும் சட்டங்களை காற்றில் பறக்க விட்டு காட்டு தர்பார் நடத்தியுள்ளனர் என்பது நடந்துள்ள நிகழ்வுகளில் இருந்து தெளிவாக தெரிகிறது. இந்த துப்பாக்கிச்சூடு அடிப்படையான சில கேள்விகளை எல்லோர் மனதிலும் எழுப்பியுள்ளது.

- ☞ 100வது நாள் போராட்டத்திற்கு முதல்நாள் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரிந்திருந்தும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆர்.டி.ஓ. ஆகியோர் 22.05.2018ம் தேதி அலுவலகத்தில் இல்லாமல் போனது ஏன்?
- ☞ சுமார் ஐந்து கிலோமீட்டர்வரை எவ்வித வன்முறையும் இன்றி அமைதியாக வந்த மக்களை ஆட்சியர் அலுவலகத்தின் முன் தடுத்து நிறுத்தி அவர்கள் கலகக்காரர்களாக மாறுமளவிற்கு காவல்துறையினர் செய்த அராஜகச் செயல் என்ன?
- ☞ போராட்டம் தீவிரமடைந்துவிட்டதை அறிந்த நிலையில் காவல்துறை அதிகாரிகளோ, ஆட்சியரோ, ஆர்.டி.ஓ-வோ போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்திட முன்வராதது ஏன்?

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

- அமைதியான போராட்டம் நடத்திக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது லத்திசார்ஜ் செய்ய உத்தரவிட்டது யார்?
- பொதுமக்கள் கல்லெறிதல் வாகன கவிழ்ப்புக்குப் பின்னர் காவலர்கள் துப்பாக்கிச்சூடு நடத்த அனுமதி கொடுத்தது யார்?
- மக்கள் போராட்டங்களில் மக்களை தீவிரவாதிகளைப் போல் பாவித்து சுட்டுத்தள்ளவும் சட்டத்தின் விதிமுறைகளை மீறி எடுத்த எடுப்பிலேயே மார்பிலும் வாயிலும் தலையிலும் துப்பாக்கியால் சுட சம்பந்தப்பட்ட காவலர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

மேற்கண்ட இந்தக் கேள்விகள் தமிழ்நாட்டில் மக்கள் ஆட்சி நடக்கிறதா? அல்லது ஹிட்லர் ஆட்சி நடக்கிறதா? என்று பொதுமக்கள் அனைவரையும் கேள்வி கேட்டு கொதிப்படைய வைத்துள்ளது. இந்த நாட்டில் மட்டுமல்ல எந்த நாட்டிலும் சாமனிய மக்கள் தங்கள் உரிமைகளை கேட்க வகுக்கப்பட்டுள்ள ஒரே வழிமுறை போராட்டம்தான். அதை ஒவ்வொரு ஆட்சியாளரும் புரிந்து கொண்டு போராட்டங்களில் உள்ள நியாயங்களை உணர்ந்து மக்களுக்கான தீர்வுகளை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி ஏற்படுத்தித்தர மறுத்தால் போராட்டங்களை கண்டுகொள்ளாத அரசுகள் இறுதியில் தங்களுடைய ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள போராட வேண்டிய நிலை எழுந்துவிடும். ஸ்டெர்லைட் ஆலை போராட்ட நிகழ்வுகள் சொல்லும் செய்தி இதுதான் "நடத்தப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டின் மூலம் எடப்பாடி அரசிற்கு சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது''. ஆளும் அ.தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்பும் வரை இனி போராட்டக் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

11 பொதுமக்களின் மரணத்திற்கும் மற்றும் பல பேர்களின் காயங்களுக்கும் காரணமான அரசாங்கத்தைக் கண்டித்தும் நடந்த நிகழ்வுகளுக்குப் பொறுப்பேற்று இந்த அரசு தானாக ராஜினாமா செய்ய வலியுறுத்தியும், ராஜினாமா செய்ய மறுத்தால் ஆட்சியை டிஸ்மிஸ் செய்யக் கோரியும், போராட்டம் நடக்கும் நாளில் அலுவலகத்தில் இல்லாமல் ஓடி ஒளிந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆர்.டி.ஓ. ஆகியோரை டிஸ்மிஸ் செய்ய வலியுறுத்தியும் **24.05.2018ஆம் தேதி மாலை 5,00 மணிக்கு அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பேருந்து நிலையங்கள் முன்பு ஜாக்டோ-ஜியோ சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.** இதில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் கலந்துகொண்டு இந்த செயல்படா அரசை வீட்டுக்கு அனுப்பும் நிகழ்வில் பங்கேற்பர். இந்த கல்லாப்பெட்டி ராஜாங்கத்தை ஜில்லாவிலிருந்து அகற்றும் வரை இனி நில்லாமல் நடக்கட்டும் போராட்டங்கள். அதன் தொடக்கமே இப்போராட்டமாக இருக்கும்.

(மு. அன்பரசு)
பொதுச் செயலாளர்

==